# தமிழ் இலக்கியங்களில் மனித உரிமைகள்

பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் நிதியுதவியுடன்
**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறை**
மற்றும்
**முனைவர் மா. ஆறுச்சாமி ஆராய்ச்சி நிறுவனம்**
இணைந்து நடத்தும்

## இரண்டு நாள் தேசியக் கருத்தரங்கம்

தொகுதி - II

**UGC sponsored two day National Seminar on**
**HUMAN RIGHTS IN TAMIL LITERATURE**



பதிப்பாசிரியர்
**முனைவர் க. முருகேசன்**

157. *Dr. T. Muraleeswari* 712
Atrocities of Bonded Labour System Portrayed in Mahasweta Devi's Select Short Stories

158. *கி. சுப்பிரமணியன்* 718
கோவூர் கிழார் பாடல்களில் மனித உரிமைக் குறிப்புகள்

159. *அ. ராஜி* 722
இலக்கியங்களில் மனித உரிமைகள்: ஒரு பருந்துப் பார்வை

160. *சு. மலர்விழி* 726
ஆண்டாள் பிரியதர்சினியின் கவிதைகளில் மனித உரிமைகள்: திருநங்கையரை முன்னிறுத்தி ஒரு தேடல்

161. *முனைவர் வெ. சுகந்தா* 731
தமிழ் இலக்கியங்களில் மனித உரிமைகள்

162. *முனைவர் பா. வேலம்மாள்* 734
தமிழ் இலக்கியங்களில் பெண்ணுரிமை சிந்தனைகள் (கவிதைகளை முன்வைத்து)

163. *முனைவர் மொ. இரவிக்குமார்* 739
தமிழ்க் கவிதைகளில் காணலாகும் மனித உரிமைகள்

164. *முனைவர் இரா. மணிமேகலை* 744
ஐவகை மன்றத்து அமைதி

165. *முனைவர் க. முருகேசன்* 749
வைரமுத்துவின் படைப்பில் மனித உரிமைப் பதிவுகள்

166. *ஆ. நித்யா* 756
சுஜாதாவின் மனித உரிமைப்பற்றிய சமூகப்பார்வை

167. *ம. விவேக் பிரபு* 760
வைரமுத்துவின் திரைப்பாடல்களில் பெண்களின் உரிமைக் குரல்

168. *முனைவர் க. பழனிவேல்* 765
புரட்சிக்கவியில் மனித உரிமைச் சிந்தனைகள்

169. *இரா. அபிமன்யு* 769
மாத்திரை சிறுகதையில் பெண்ணுரிமை

170. *முனைவர் சு. சதீஷ்குமார்* 774
சூதுபோர்ச் சருக்கத்தில் மனிதஉரிமை மீறல்கள்

171. *ச. மல்லிகா* 779
பிரபஞ்சனின் சிறுகதைகளில் பெண்ணுரிமை

172. *மு. ஜெயலட்சுமி* 784
அகநானூறு காட்டும் பெண்ணுரிமை

173. *முனைவர் ந. இரஞ்சன்* 791
தமிழ் மண்ணின் உரிமை காப்போம்

174. *முனைவர் கு. முத்துக்குமார்* 795
இலக்கியப் படைப்பாளிக்கெதிரான உரிமை மீறல்

# 170. சூதுபோர்ச் சருக்கத்தில் மனிதஉரிமை மீறல்கள்

**முனைவர் சு. சதீஷ்குமார்**
*உதவிப்பேராசிரியர்*
*தமிழ்த்துறை*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர் - 641 029.*

## முன்னுரை

தமிழகத்தில் பாரதக்கதை நெடுங்காலமாக வழங்கி வந்துள்ளது. கி.பி. 9ஆம் நூற்றாண்டில் தோன்றிய பெருந்தேவனார் என்பவர் வெண்பா யாப்பில் பாரதக் கதையைப் பாடினார். கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அரும்பாக்கத்து அருணிலை விசாகன் என்பவர் பாரதக் கதையை இயற்றினார் எனத் திருவாலங்காட்டுக் கல்வெட்டு பதிவுசெய்துள்ளது. கி.பி. 14 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வில்லிப்புத்தூரார் நாலாயிரத்திற்கும் மேற்பட்ட செய்யுட்களால் பாரதக் கதையைப் பாடியுள்ளார். அவரைத் தொடர்ந்து கி.பி.18 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நல்லாப்பிள்ளை என்பார் பாரதக் கதையை இயற்றினார். அட்டாவதானம் அரங்கநாத கவிராயர் பாரத்தின் பிற்பகுதியை விளக்கி 2500 செய்யுட்களை இயற்றியுள்ளார். இவற்றுள் வில்லிப்புத்தூரார் பாடிய பாரதத்தின் இரண்டாவது பருவமான சபா பருவத்தின் சூதுபோர்ச் சருக்கத்தில் இடம்பெற்றுள்ள மனிதஉரிமை மீறல்களை ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமைகின்றது.

## துரியோதனின் வஞ்சக எண்ணம்

தருமன் நடத்திய இராசசூய யாகத்திற்குச் சென்று அத்தினாபுரம் திரும்பிய துரியோதனன் பாண்டவர் மீது பொறாமை கொண்டான். தருமனின் செல்வங்கள் அனைத்தையும் இப்போதே விரைவாகக் கைப்பற்ற வேண்டும் என்றும் காலம் கடந்து போனால் அவன் வலிமையடைந்துவிடுவான் என்றும் அவைக்கு முன் சினந்து கூறினான். யானைகளையும், மணிகள் கட்டப்பட்ட தேர்களையும், குதிரைகளையும், நஞ்சைப் போன்ற வீரர்களையும் நால்வகைப் படையாகக் கொண்ட பாண்டவர்களை வஞ்சனை செய்து அழிக்க வேண்டும் எனத் தன் கீழ்மையான எண்ணத்தை வெளிப்படுத்தினான்.

***"வஞ்சனை கொண்டே யாதல்***
***வாரணம் மணித்தேர் வாசி***
***நச்சு அனையவரால் ஆதல்***
***நாளையே அழித்தல் வேண்டும்" (வி.பாரதம்.,***
***சபாபருவம், சூதுபோர்ச் சருக்கம். பா. 960)***

என்ற பாடலடிகளில் துரியோதனனின் மனிதநேயமற்ற வஞ்சக எண்ணம் புலப்படுகின்றது.